**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**
**வழக்கு எண்: CC -210/2025**

**வழக்கு சாட்சி : LW1 (PW1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாக்கியம் | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| கணவர் பெயர் | : | சின்னையா | சமயம் | : | |
| கிராமம் | : | காலாடிப்பட்டி | வயது | : | 58 |
| தாலுக்கா | | | | : | |

Solemnly affirmed by Thiru. Abraham Selvin , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**எதிரி ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act-1969 Section -6(2) on** the **day 23th day of February 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 - Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar Card of the Witness verified.**

<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :-</u>

நான் தற்போது காலாடிப்பட்டியில் குடியிருந்து வந்து வீட்டுக்குடித்தனம் நடத்தி வருகிறேன். எனக்கு பட்டியல் சாட்சிகள் 2 முதல் 6 வரை உள்ளவர்கள் மற்றும் ஆஜர் எதிரியை தெரியும் . என் உறவுக்காரர் ஆவார். கடந்த 2 வருடத்திற்கு முன்பாக எனக்கும் , ஆஜர் எதிரிக்கும் சிறு, சிறு சண்டைகள் வரும். ஒரு நாள் இரவு நான் என் வீட்டில் இருந்த போது 10,15 நபர்கள் காமக் கொடுரமான வார்த்தைகளால் திட்டி, அடித்து மிரட்டிவிட்டனர். சம்பவம் நடந்த நேரம் இருட்டாகவும், கூட்டமாகவும், இருந்தாலும், சம்பவ இடத்திற்கு தள்ளி ஆஜர் எதிரி நின்று கொண்டிருந்ததால் அவர் தான் என்னை காமக் கொடுரமான வார்த்தைகளால் திட்டி, அடித்து மிரட்டல் விடுத்திருப்பார் என்று சந்தேகத்தின் பேரில் புகார் மனு அவர் மீது கொடுத்துவிட்டு, தற்போது என்னிடம் சமூகம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு , அதில் உள்ள கைபொப்பம் என்னுடையது தான். **கையொப்பத்துடன் கூடிய புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும்.** சம்பவத்திற்கு பிறகு தான் ஆஜர் எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று தெரிந்து ஊர்முக்கியஸ்தர்கள் முன்னிலையில் நான் முழுமனதோடு சமாதானகிவிட்டு, இன்று சமூகம் நீதிமன்றத்தில் யாருடைய வற்புறுத்தலுமின்றி சமாதான மனுவில் கையொப்பம் போட்டுள்ளேன். வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை. போலிசார் என்னை விசாரித்த போது அவர் பற்றி மிகைப்படுத்தி கூறிவிட்டேன்.

**(சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

கடந்த 09.05.2025 ம் தேதி நான் என் வீட்டில் ஆடு கட்டி வைத்திருந்ததாகவும் அப்போது ஆஜர் எதிரி காமக் கொடுரமான வார்த்தைகளால் திட்டி, அடித்து மிரட்டினார் என்று, புகார் மனுவிலும், போலிசார் விாசரணையிலும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரியுடன் சமாதானமாகி செல்வதால் அரசு தரபபில் இருந்து விலகி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

**மறு விசாரணை – இல்லை.**